மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# ஒப்பியல் நோக்கில் அகநானூறு – காதாசப்தசதியில் தோழியின் மனிதநேயம்

**முனைவர் பெ. சுமதி**
உதவிப்பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**முன்னுரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை தெளிவாகப் பதிவு செய்திருக்கிறது. தொல்காப்பியர்,

**மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்" (தொல்.பொ.57)**

என்று கூறுகின்றார். பெயர் குறிப்பிட்டு பாடும் மரபு அகத்திணைப் பாடல்களுக்கு இல்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. சங்க இலக்கியம் போன்றே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் காதல் வாழ்க்கையை காதா சப்தசதி பதிவுசெய்துள்ளது போன்று சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. ஆனால் 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' என்ற கட்டமைப்பு சாதவாக மன்னனால் எழுதப்பட்டும் தொகுக்கப்பட்டும் உள்ளது. சங்க இலக்கியம் காதாசப்த சதி என்ற இரண்டு இலக்கியங்களிலும் காதல் வாழ்க்கை பெயர் குறிப்பிடப் பெறாமல் பதிவு செய்யப்பட்டிருப்பது தெளிவு. அதனடிப்படையில் சங்க இலக்கியத் தோழியின் மனிதநேயத்தையும் காதா சப்தசதி தோழியின் மனிதநேயத்தையும் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மனிதநேயம்**

உலகத்தில் இறைவனால் படைக்கப்பெற்ற உயிர்களில் மகத்தானது மனித உயிர், மனித உயிர்க்கு மட்டுமே பகுத்தறிவுச் சிந்தனை உண்டு. அந்தப் பகுத்தறிவுச் சிந்தனையால்தான் மனிதன் ஒரு செயலைச் செய்யும் முன் சிந்திக்கும் ஆற்றல் பெறுகின்றான். நல்லவை எவை? கெட்டவை எவை? என்று சிந்திக்கும் நிலையில் கெட்டதை விட்டு நல்லதைச் செய்ய மனிதன் முன்வர வேண்டும். மற்றவர்களைத் துன்பப்படுத்தக்கூடாது என்ற மனநிலை ஒவ்வொருவருக்கும் உருவாக வேண்டும். அதற்கு அடிப்படை அன்பு. அந்த அன்பே இன்பத்தின் ஊற்றாகும். அவ்வின்ப ஊற்றே மனித இனத்தில் படிந்துள்ள மாசுகளை நீக்கும். மனிதனை மனிதனாக வாழ வைக்கும் திருவள்ளுவர்

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு (86)**

என்று அன்பை உலகப் பொதுமையாக்குவார்.

அமெரிக்க கலைக் களஞ்சியம் 'மனிதநேயம் (humanism) என்னும் இக்கோட்பாடு கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்களைப் போன்ற பழமையும், இருபதாம் நூற்றாண்டிற்கே உரிய புதுமையும் கொண்டு திகழ்கின்றது. பரந்துபட்ட பொருட் செறிவுடைய இக்கோட்பாடு, தன்னுரிமை கொண்ட மனிதமாண்பை – பகுத்தறிவாளனாகிய அம்மனிதன் பெற்றுள்ள உண்மை – நேர்மை ஆகிய பண்புகளைக் கொண்ட ஒரு மெய்யியலாகவும் உருவாக்கியிற்று. இம்மை வாழ்வில் கிடைக்கும் அனைத்தும் நிகழ்வுகளையும், நுகர்வுகளையும் மனிதன் நுகரவேண்டும் என்பதும், வேறு எந்த ஆற்றலும் மனித ஆற்றலை விஞ்சக்கூடியதாக இல்லை என்பதை வலியுறுத்துவதும் இதன் இலட்சியமாகும். மனிதநேயம் சமயத்தை – அறிவியலை அல்லது ஏதேனும் ஓர் அரசியலைச் சார்ந்தோ அல்லது எதனையும் சாராமல் தனித்தேகூட இருக்கலாம். ஆனால் அதன் உயிர்த் துடிப்பு மதச்சார்பின்மை, முற்போக்குச் சிந்தனைகள், சமயப் பொறை ஆகியனவாகும்' (encyclopedia Americana, vol.14 ல்.553) என்று குறிப்பிடுகின்றது.

பூதங்களின் சேர்க்கையால் தோன்றுவது உடல் இயக்கம், அச்சேர்க்கையின் பிரிவே மரணம் என்பது. எனவே உயிரோடு இருக்கும் வரையில் மகிழ்வாக வாழவேண்டும். ஏனெனில் மரணத்திற்கு தப்பிய உயிர் இல்லை. உடல் சாம்பலான பிறகு உயிர் திரும்பி வருதல் இல்லை. (தர்மானந்த கோஸம்பிஇ 1957:253) என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. மனிதன் வாழும் காலத்தில் மகிழ்ச்சியாகவும், மற்றவர்களிடத்து அன்பு செலுத்தக் கூடியவனாகவும், அவர்களின் துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ளக் கூடியவனாகவும் செயல்பட்டால் மனித சமூகம் மனித நேயமுள்ள சமூகமாகத் திகழும்.

**தோழியின் மனிதநேயம்**

தலைவிக்கு நெருக்கமான உறவானவள் தோழி. அக இலக்கியங்கள் அதிகமாகக் குறிப்பிடப்படும் பாத்திரம் தோழி, செவிலியின் மகள் என்றும் குறிப்பிடப்படுகின்றாள். தலைவியின் நலன் மட்டும் குறிக்கோளாகக்கொண்டு வாழும் தன்னலமற்றவள் தோழி என்பதை அக இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

"ஐந்திணை இலக்கியத்துள் தோழி என்னும் ஆளைப் படைத்த பயன் என்ன? அவள் துணையின்றி பகற்குறிகள், இரவுக் குறிகள் நிகழாது. களவொழுக்கம் நீடிக்காது, ஆதலின் தோழி வேண்டும் என பலர் கருதுவர். இக்கருத்து பிழைபட்டது. களவு நீள வேண்டும் என்பதும் காதலாயினார் இருவகைக் குறிகள் நிகழ்த்த வேண்டும் என்பதும் அகத்திணையின் நோக்கம் இல்லை. பால் வயத்தால் தாமே கண்டு தம்முட்புணர்ந்த களவுக் காதலர்கள் கற்பாக வேண்டும். வெளிப்படையாக மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதே அதன் நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்ற வருபவளே தோழி என அறிக. இதனால் தோழி கற்பொழுக்கத்தைக் காட்டிலும் களவொழுக்கத்தில் இன்றியமையாதவள் என்பது விளங்கும்". என்று வ.சுப. மாணிக்கம் குறிப்பிடுகின்றார் (2009:56). களவைக் கற்பாக்கி தலைவியின் இல்லறம் சிறக்கப் பாடுபடுகின்றவளே தோழி என்பதை அறியமுடிகின்றது.

தலைவியுடன் சிறப்போடு இருந்த துணைப்பாத்திரத்தைச் சுட்ட தோழி, இகுளை, பாங்கி, சிலதி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்ற சொற்கள் பல்வேறு கால நிலைகளில் தோன்றி வழக்காற்றிலிருந்தன. உடல் உறுப்புக்களில் 'கை' என்பது முயற்சியைச் சுட்டுவது போல, தோள் என்பது, உடனிருந்து உதவும் தன்மையைத் 'தோளோடு தோள் கொடுத்தல்' என்ற உலக வழக்கு தெளிவுபடுத்துகிறது. எனவே தோள் போன்றவன் தோழன் என்பதும், தோள் போன்றவள் தோழி என்பதும் கொள்ளத்தக்கன. தமிழில் 'ழ' கரமும் 'ள' கரமும் சொற்களில் இடம் மாறும் இயல்புடையன. எனவே தோளன், தோளி என்பன முறையே தோழன், தோழி என்றே திரிந்தன.

உறுப்பின் பெயரால் மக்கள் முறைப் பெயர் பெறுதல் தமிழ்மொழியில் உண்டு. கண் போன்றவன் கணவன் (கண் அவன்), தலை போன்றவன் தலைவன். இவ்வாறே தோள் என்ற உறுப்பின் பெயரால் தோழன், தோழி என்ற பெயர்கள் தோன்றின.

தலைவியின் திருமணம் நடப்பதற்கு முன்பு, அவள் மணம் ஆகாதவளே. ஆயினும் அவளே தலைவியின் திருமணத்தை முடித்து வைக்கிறாள். அவள் நாற்றம், தேற்றம் முதலியவற்றால் தலைவியின் நிலையை உணர்ந்து கொள்கிறாள். ஆனால் எந்த இடத்திலும் அவள் தன் மனநிலையை வெளிப்படுத்தவில்லை. ஏறத்தாழ தலைவியின் வயதுடையவளாயினும் அவள் முதிர்ந்த அளவினள். தலைவியுடன் கற்பு நலம் கருதி அவள், தன் பெற்றோர், உற்றாரை விட்டுப் பிரிவதற்கும் துணை நிற்கிறாள். அவள் அளவற்ற உரிமை படைத்தவள். ஆகவே, தலைவியை வற்புறுத்தியும், தலைவனைக் கண்டித்தும், தாயிடம் வாதாடியும் தான் நினைத்ததை முடிக்கிறாள். தலைவியின் காதலுக்கு வெற்றிப் பாதை காட்டும் அவள் யாரையும் காதலிக்கவில்லை. தலைவியை குறியிடத்துயத்து அவர்களின் மகிழ்ச்சிக்கு வழியமைத்து ஒதுங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்ற அவள் தன் மகிழ்ச்சிக்கு வழி தேடவில்லை. தன் நலம் சிறிதுமின்றித் தலைவியின் நலனையே நாடும் தோழி, தமிழிலக்கியத்தில் மட்டுமின்றி உலக இலக்கியத்திலேயே ஒப்புயர்வற்ற படைப்பாகிறாள்.

துணைப்பாத்திரம் இன்றேல் தலைமைப் பாத்திரம் சிறப்புறாது. சங்க இலக்கியத்தில் வரும் துணைப் பாத்திரங்களில் தோழியே தலைமை தாங்கும் தகுதியுடையவள். அவள் இன்றேல் தலைவியும் தலைவனும்கூட ஒளி பெறமுடியாது. இவளுடைய வெறுப்புக்கு உள்ளாகும் பரத்தையும்கூட இவள் கூற்றால் சிறப்பே பெறுகிறாள்.

மாந்தரில் பெரும்பாலோரின் அன்பு, நிலவைப்போல் கூடிக் குறையும் தன்மையது. எனவேதான் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தமை மேற்கொள்கிறான். பாணன் கலை மேல் கொண்ட பற்றை மறந்து பரத்தை தரும் பொருள் மேல் பாசம் கொள்கிறான். ஆனால் தோழி ஒருத்தியே, தலைவி தலைவன் மீது மாறா அன்புடன் திகழ்கிறாள். பிறரின் போக்கு வேறானாலும் அவளுடைய அன்புநிலை மட்டும் காந்த முள் போல் என்றும் மாறாமல் உள்ளது.

'தோழி தானே செவிலி மகளே' என்பது தொல் காப்பியம் தரும் குறிப்பு. இதைத் தவிர தோழியின் பிறப்பு, திருமணம், வாழ்க்கை குறித்து வேறெந்த செய்தியும் அறிய முடியவில்லை. அவள் தலைவிக்காகவே – தலைவியின் காதல் வெற்றிக்காகவே – படைக்கப்பட்ட பாத்திரமாக காணப்படுகிறாள். தலைவியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து, தலைவி மகப்பேறு பெற்ற நிலையில் செவிலியாக மாறும்வரை தன் தலைவிக்காகவே அவள் வாழ்கிறாள். (சரளா ராசகோபாலன்: 1986,10) என்று தலைவிக்காக தோழி தம்மை அர்ப்பணித்துக் கொண்டவள் என்பதைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

தலைவன் இரவுக்குறி வருவதை மறுத்து தலைவன் சிறைப்புறமாக நிற்கும் நிலையில் தோழி தலைவிக்குச் சொல்லுகையில், தலைவனுக்கும் சொல்லுகின்றாள். முகில்கள் அசைந்தாடும் மலையில், கருவுற்றிருக்கும் பெண்புலியின் பசியினைப் போக்க ஆண்புலி, பெரிய ஆண்பன்றியினைக் கொன்று, அச்சம் தரும் நல்ல பாம்பு மேய்வதற்குச் செல்ல ஒளி வேண்டி உமிழ்ந்து வைத்த மணியாகிய விளக்கொளியில் புலால் நாறும்படியாக இழுத்துச் செல்லும் கொடூரமான காட்டு வழியை உடையது, தலைவன் வரும் வழி என்று தோழி கூறுகின்றாள்.

**அருள்புரி நெஞ்சமொடு எஃகு துணையாக**
**வந்தோன் கொடியனும் அல்லன்: தந்த**
**நீ தவறு உடையையும் அல்லை, நின்வாயின்**
**ஆனா அரும் படர் செய்த**
**யானே, தோழி! தவறு உடையேனே** (அகம்.72,19–12)

இருவர் மீதும் தவறு இல்லை. அந்தத் தவறு செய்தவள் நான்தான் செய்ததாக' குறிப்பிடுகின்றாள். தவறு செய்தவர்கள் தலைவனும், தலைவியும். ஆனால் அவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாக அவர்கள் தவறைத் தன் தவறாகக் கூறித் திருத்த முயலும் தோழியின் அன்புள்ளம் அளவிடற்கரியது.

**தலைவியின் அன்பிற்குரியவள்**

தலைவியை அடைய நினைக்கும் தலைவன் அதற்கு சரியான வாயில் தேடுகின்றான். அந்நிலையில் தலைவியும், தோழியும் நீராடும் நிகழ்ச்சியைப் பார்க்கிறான்.

**"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்**
**கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்**
**புணைகை விட்டுப் புனலோ டொழுகின்**
**ஆண்டும் வருகுவள் போலு மாண்ட**
**மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்**
**செவ்வெரி நுறமுங் கொழுகடை மழைக்கட்**
**குளிதலைத் தலைஇய தளிரன் னோளே"** (குறு–222)

தோழி தெப்பத்தின் தலைப்பகுதியைக் கையில் பிடித்தால் தலைவியும் தெப்பத்தின் தலைப்பகுதியை பிடிக்கின்றாள். தோழி தெப்பத்தின் கடைப்பகுதியைக் கையில் பிடித்தால் தலைவியும் தெப்பத்தின் கடைப்பகுதியை பிடிக்கின்றாள். தெப்பத்தைக் கைசோரவிட்டு நீரோடு இவள் சென்றாலும் அங்கும் தலைவி செல்வாள் என்று தலைவன் தலைவியின் செயலை நினைத்துப் பார்க்கின்றான். இருவரும் மனமொத்த நிலையில் இருக்கின்றனர். தலைவியிடம் வாயிலாக செல்லுவதற்குப் பொருத்தமானவள் என்று தலைவன் நினைக்கின்றான். இங்கு தலைவியின் நம்பிக்கைக்குரியவள் தோழி என்பதை அறிவதோடு தோழி தலைவிக்காக வாழும் சுயநலமில்லாத தியாக உள்ளம் கொண்டவள் என்பதை இப்பாடலின் வழி அறியலாம்.

இரவுக்குறியில் தலைவனோடு மகிழ்ச்சியாக இருந்த தலைவி, தலைவன் பிரிவைத் தாங்கமுடியாமல் வருந்திய நிலையில் தோழி, தனது துன்பத்தில் பங்கெடுத்துக் கொண்டதைத் தலைவனிடம் மனம் நெகிழ கூறுகின்றாள்.

**"இவண்**
**நீவந் ததனினும், இனிது ஆகின்றே–**
**தூவல் கள்ளின் துனைதேர், எந்தை**
**கடியுடை வியல்நகர் ஓம்பினள், எந்தை**
**யாய்அற் வுறுதல் அஞ்சி, பாணாள்,**
**காவல் நெஞ்சமொடு காமம் செப்பேன்,**
**யான்நின் கொடுமை கூற நினையுஆங்கு!**
**இணையல் — வாழி, தோழி! — நத்துறந்தவர்,**
**நீடலர் ஆகி வருவர், வல்லென் கங்குல் உயவுத்துணை ஆகிய**
**துஞ்சாது உறைவி இவள்உவந் ததுவே!"** (அகம். 298:14–23)

இருள் செறிந்த காட்டு வழியில் வெண்ணிற வேலினை கையிலேந்தி இரவு நேரத்தில் நீ வந்திருக்கின்றாய். என் தந்தையின் காவல் நிறைந்த வீட்டில் அன்னை என்னை இற்செறித்து, அவளும் காவலுக்கு அமர்ந்தாள். நள்ளிரவில் தன் காமத்தினைத் தோழியிடம் கூறினால் தாய் அறிவாள் என்று அஞ்சி தோழியிடம் கூறவில்லை. ஆனால் நீ வராத குறிப்பினைத் தோழியிடம் மெதுவாகக் கூறினேன். அதைக் குறிப்பாக உணர்ந்த தோழி, தலைவன் காலம் தாழ்த்தாமல் விரைந்து வருவார். அதனால் வருந்தாமல் இருப்பாயாக என்று கூறி இரவு முழுவதும் கண் துயிலாமல் உற்ற துணையாக இருந்தாள் தோழி. அவள் மகிழ்ச்சி, எனக்கு நீ இரவில் வந்து என் துன்பத்தைப் போக்கிய மகிழ்ச்சியிலும் பெரிதும் மகிழ்ச்சி தருவதாகும் என்று தலைவி தலைவனிடம் தோழியின் சுயநலமற்ற அன்பைக் குறிப்பிடுகின்றாள். தலைவன் வந்தவுடன் தலைவியின் துன்பம் நீங்கியது என்பதை அறிந்து தோழி அடைந்த மகிழ்ச்சி, தலைவன் தன்னைக் காண வந்த வருகையிலும் மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும் என்று தலைவி தலைவனிடம் கூறுவது தலைவிக்கும் தோழிக்கும் இடையேயுள்ள அன்பின் எல்லையற்ற நிலையை வெளிப்படுத்துகின்றது. தலைவியின் துன்பம் நீங்கியதை அறிந்து தோழி மகிழ்ச்சி அடைவதாக தலைவி குறிப்பிடுவது தோழிக்கு, தலைவி மீதுள்ள அளவற்ற அன்பையும், தலைவியின் நலத்தை விரும்பும் மாசற்ற மனித நேயத்தையும் வெளிப்படுத்துகின்றது.

**பகல், இரவுக்குறிகள்**

தலைவியை மணந்து கொள்ள விருப்பம் இல்லாத தலைவன், தலைவியைப் பகல், இரவுக் குறிகளில் சந்திக்க விரும்புகின்றான்.

> "களவொழுக்கம் திடீரென நின்றுபோவதற்கு இடமுண்டு. தோழியின் 'உறுதுணையால் அது நீடித்து ஓடுகின்றது. தோழி பெண்ணாகலினும் பணிமகளாகலினும், தலைவியைவிடத் தனித்துச் செல்லும் உரிமையும் கடமையும் அவளுக்கு உண்டு. காதலோர் தம் கூட்டத்துக்கு தகும் இடம் எது? என்று அவளால் காணமுடியும். எனினும், அவளும் ஒரு குமரியாதலானும் ஏவல் மகளாதலானும் சில எல்லைக்கு உட்பட்டே உதவி செய்யக் கூடும். அவளுடைய சுற்றுச் செலவும் ஓரளவுபட்டதே, மறைவொழுக்கத்தை, சமுதாயப் பெருங்கண்கள் பார்த்துக் கொண்டிரா, சுற்றுப்புறக் குளவிகள் கொட்டாது விடா, எண்ணவூசிகள் துளையாது போகா, ஆதலின் காதற்களவுக்கு உலகில் புகலிடம் இல்லை. களவைக் கற்பாக்கினாலல்லது உலகுக்கு உறக்கம் இல்லை".

(வ.சுப. மாணிக்கம். 2009 54) என்று பகல், இரவுக் கூட்டங்களுக்கு தோழியின் உதவி தேவை என்பது குறிப்பிடப்படுகின்றது.

பகற்குறியில் தலைவியை குறியிடத்து விட்டு தலைவனை எதிரே பார்த்து தோழி, தலைவனிடம் கூறுகின்றாள்

**கல்சேர்ந் தன்றே, பல்கதிர் ஞாயிறு**
**மதர் எழில் மழைக்கண் கழுழ, இவளே**
**பெரு நாண் அணிந்த சிறுமென் சாயல்**
**மாண்நலம் சிதையே ஏங்கி, ஆனாது,**
**அழல் தொடங் கினளே – பெரும்** **(அகம்.120,5–9)**

உன்னுடைய பிரிவால் தலைவி அழத் தொடங்கி விட்டாள். அன்றில் பறவை துணைபிரிந்தால் வாழாது இறக்கும். அதுபோல தலைவியும் உன்னைப் பிரிந்தால் உயிர் வாழமாட்டாள். இதிலிருந்து தலைவியின் நிலையை எடுத்துக்கூறி தலைவியின் உயிரைக் காக்க வேண்டிய கடமை தலைவனுக்கும் உள்ளது என்பதை உணர்த்துகின்றாள். அதனால் இரவில்

தங்கிச் செல்வாயாக என்று தோழி தலைவனிடம் கூறுகின்றாள். தலைவியின் துன்பத்தைப் போக்க தலைவனை இரவில் தங்கிச் செல்க என்று வலியுறுத்தும் தோழியின் சுயநலமில்லாத அன்பு போற்றுதலுக்குரியது.

தலைவன் தலைவியை மணந்து கொள்ள விருப்பமில்லாமல் நாள்தோறும் இரவில் வந்து செல்கின்றான். இதை அறிந்த தோழி இரவு நேரத்தில் வருவதில் உள்ள இடையூறுகளை எடுத்துக் கூறி தலைவனை பகல் நேரத்தில் வருமாறு கூறி இடத்தையும் தோழி குறிப்பிட்டுச் சொல்லுகின்றாள்.

**நீயும்**
**தேம்பாய் ஓதி திருநுதல் நீவி,**
**கோங்குமுகைத் தன்ன குவிமுலை ஆகத்து,**
**இன்துயில் அமர்ந்தனை ஆயின், வண்டுபட**
**விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்,**
**பூவேய் புன்னைஅம் தண்பொழில்,**
**வாவே தெய்ய, மண்ந்தனை செலற்கே (அகம். 240:9–15)**

தலைவியை இரவில் பார்க்க வேண்டும் என்றால் அது முடியாத செயல். காரணம் என் தந்தை தான் பிடித்த மீன்களை என் அண்ணன்மார்களுக்கு காட்டுவதற்கு இரவில் வீட்டிற்கு வருவார். என் தாயும் நீருண்ணும் குளிர்ச்சி பொருந்திய துறையில் உள்ள தெய்வத்தைத் தன் தோழிமாருடன் தொழுது வழிபடுவாள். நீ தலைவியைக் கூடி இன்புற வேண்டுமானால் வண்டுகள் மொய்க்கும் பூக்களையுடைய செருந்தி மரங்களும், புன்னை மரங்களும் உள்ள அழகிய குளிர்ச்சி பொருந்திய சோலைக்கு வருவாயாக என்று தோழி, தலைவனுக்கு பகல் குறியைக் காட்டுகின்றாள். தலைவன் இரவுக் குறியில் வந்தால் பல இடர்களைச் சந்திப்பான், அதனால் தலைவி துன்பப்படுவாள் என்று எண்ணி தோழி, தலைவி மீதுள்ள அன்பின் காரணமாகத் தலைவனைப் பகலில் வருமாறு வேண்டுகின்றாள்.

காதா சப்தசதியில் தோழி தலைவனிடம், தலைவியைச் சந்திப்பதற்கான இடத்தைக் குறிப்பிட்டு சொல்லுகின்றாள்.

**“குவளை மலரில் கருவண் டினங்கள்**
**மதுவைக் குடித்தே மயங்கிக் கிடக்கும்**
**முழுமதிச் செல்வன் முற்றக் குடித்தலின்**
**அருள்பெறச் சரணுறும் இருள்முடிச் செனவே” (6–61)**

குவளை மலரில் மதுவுண்டு மயங்கிக் கிடந்த கருவண்டுகள், திங்கள் இருளை முற்றிலும் போக்கிவிட மீதி இருந்த இருள் பொதிந்த முடிச்சுகள் போன்று கருவண்டுகள் காணப்பட்டன. அந்த கருவண்டுகள் குவளை மலரில் மதுவுண்டு மயங்கிக் கிடப்பது திங்களின் காதலியாகிய குவளை மலரில் சரணடைந்து தங்களைக் காக்குமாறு வேண்டுவது போல உள்ள செயலைத் தோழி தலைவனுக்கு குறிப்பிடுகின்றாள். இதில் தோழி சிறப்பான உவமை மூலம் தலைவன் தலைவியை சந்திப்பதற்கான இரவுக்குறியைச் சுட்டுகின்றாள்.

தலைவனை இரவில் சந்திக்க வேண்டும் என்று விரும்பிய தலைவியின் செயலைத் தோழி, பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

**"இன்றுயான் நடுநிதி இருட்டி லந்தச்**
**செல்வனைக் காணச் செல்ல வேண்டும்**
**என்றவள் கண்ணிமை இறுக மூடி**
**இல்லந் தனில்நடை மெல்லப் பியன்றாள்"** **(காதா: 3–49)**

இன்று இரவு தலைவனைக் காணச் செல்ல வேண்டும், என்று நினைத்த தலைவி அதற்கு ஒத்திகையாகப் பகலிலேயே வீட்டில் கண்களை இறுக மூடிக் கொண்டு மெல்ல நடந்து பயிற்சி செய்தாளாம் என்று தோழி தலைவியின் செயலைக் குறிப்பிடுகின்றாள். தலைவனைக் காணவேண்டும் என்ற தலைவியின் ஆர்வ மிகுதியே தலைவியின் இச்செயலுக்கு காரணம் என்பதை அறியமுடிகின்றது. தலைவனைக் காண ஆயத்தமாகும் தலைவியின் செயலைப் பார்த்து மகிழ்ச்சியடையும் தோழியின் மனநிலை அவள் கூற்றுவாயிலாகவே வெளிப்படுவது தலைவியின் மீதுள்ள அன்பின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. அகநானூறு மற்றும் காதா சப்தசதியில் தலைவனும் தலைவியும் சந்திப்பதற்கான குறியிடத்தை தேர்ந்தெடுப்பதில் தோழிக்கு முக்கிய பங்குண்டு என்பதை இரண்டு இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இரவில் தலைவன் வரும் வழியின் இடர்களைக் குறிப்பிட்டு பகலில் வருமாறும், தலைவியின் துன்பத்தைப் போக்குவதற்கு இரவில் தங்கிச் செல்லுமாறும், இரவுக் குறியில் தலைவனைக் காணச் செல்லுகின்ற தலைவியின் மனநிலையைப் பார்த்து மகிழ்ச்சியடையும் அன்புள்ளத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை.

**வரைவு கடாவுதல்**

களவை நீட்டிக்க விரும்பிய தலைவனுக்கு நிலையைக் கூறி விரைந்து வரைந்து கொள்ளுமாறு தோழி வற்புறுத்துவது ஆகும்.

"களவு நீட்டிப்பின், வெறியாட்டு, நொது மலர், வரைவு முதலான பல தொல்லைகளுக்கு இடம் ஏற்படும் என வருவது அறிந்த அறிவுடை தோழி, களவென ஒன்று நடந்தது என்பது தோன்றா வகையில் மணத்தை முடித்து வைக்கப்பாடுபடுவாள். பல்வேறு வழிகளால் தலைவனை வற்புறுத்துவாள். இத்துறை வரைவு கடாவுதல் எனப் பெறும்". (வ.சுப. மாணிக்கம். 2009: 67) என்று கூறப்படுகின்றது.

தோழி தலைவனுக்கு பகற்குறி, இரவுக்குறி மறுத்து தலைவி இற்செரிக்கப்பட்ட நிலையை அறிவுறுத்தி தலைவியை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்துகின்றாள். தோழி தலைவனிடம் தாய் தன் கண்களைக் காட்டிலும் தலைவி மீது அன்புடையவள் என்றும், எம் தந்தை இவள் மெல்லிய சிவந்த அடி கீழேபடுவதை சிறிதும் பொறுத்ததுக் கொள்ளாதவனாய் எங்கு என்ன செய்ய செல்கின்றாய் என்று கடிந்து கொள்வார், நான் என் தலைவி மீது உயிரையே வைத்திருக்கின்றேன் என்று கூறுகின்றாள்.

**"யாயே, கண்ணிலும் கடுங் காதலளே**
**எந்தையும் நிலன் உறப் பெறாஅன்: சீறடி சிவப்ப**
**எவன், இல! குறுமகள் ! இயங்குதி? என்னும்**
**யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்,**
**இரு தலைப் புள்ளின் ஓர் உயிரம்மே:**
**ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்,**
**கிளி விளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ்சினை,**
**விழுக்கோட் பலவின் பழுப் பயம் கொண்மார்,**
**குறவர் ஊன்றிய குரம்பை புதைய**

**வேங்கை தாஅய தேம் பாய் தோற்றம்**
**புலி செத்து, வெரீஇய புகர்முக வேழம்,**
**மழை படு சிலம்பில் கழை பட, பெயரும்**
**நல் வரை நாட ! நீ வரின்,**
**மெல்லியல் ஓரும் தான் வாழ்வே.” (அகம்.12:1–14)**

இரு தலையையுடைய ஒரு பறவை போன்று நானும், எம் தலைவியும் இருக்கின்றோம். நீ வரும் வழியோ பலாப்பழத்தைப் பெறுவதற்காக குறவர்கள் குடிசை அமைத்து வாழ்வர். அந்த குடிசையின் மீது வேங்கைப் பூ உதிர்ந்து கிடப்பதைப் பார்த்த யானை, புலி என் அஞ்சி மூங்கில்கள் முறிந்து விழும்படி ஓடும் காட்டு வழியாக வருகின்றாய். அவ்வாறு வந்தால் மெல்லிய தன்மையுடைய தலைவி உயிர்வாழ மாட்டாள். அதனால் அவளை விரைந்து திருமணம் செய்துகொள் என்று தோழி, தலைவனை வற்புறுத்துகின்றாள். இரு தலையையுடையை ஒரு பறவை போன்று நானும், எம் தலைவியும் என்று தலைவியின் உயிர் தம் உயிர் போன்றது. அதனால் தலைவிக்கு துன்பம் ஏற்பட்டால் அது தனக்கும் ஏற்படும் துன்பம் என்று நினைத்து தலைவியின் துன்பத்தைப் போக்கி அவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கின்ற தோழியின் தன்னலமற்ற அன்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

களவு வாழ்க்கையை நீட்டிக்க விரும்பி தலைவன் இரவுக்குறி வந்து மீள்கின்றான். அவனைத் தோழி தனியாகச் சென்று அவன் வரும் வழியின் துன்பத்தைக் கூறி வரைவு கடாவுகின்றாள்.

**“தவிர்வுஇல் உள்ளமொடு எஃகு துணையாக,**
**கனைஇருள் பரந்த கல்அதர்ச் சிறுநெறி**
**தேராது வரூஉம் நின்வயின்**
**ஆர்அஞர் அரும்படர் நீந்துவோரோ?” (அகம்.202:12–15)**

புலியைக் கொன்ற யானை சுற்றித் திரியும், பாம்பின் தலை துண்டாகுமாறு இடி முழங்கும் நடு இரவில் நீ வருகின்றாய், அதனால் வருகின்ற துன்பத்தைச் சிறிதும் நினைக்காதவனாய் வருகின்றாய் அவ்வாறு வருகின்ற உன்னைப் பற்றிக் கவலை கொள்கின்றவர்களில் எனையன்றி இவ்வுலகில் யார் உள்ளனர்? என்று தோழி தலைவனிடம் வழியின் இடரைச் கூறி இரவுக்குறி மறுத்து வரைவு கடாவுகின்றாள். தலைவனிடம் தன்னைவிட அன்பு செலுத்தக்கூடியவர் யார் உள்ளனர்? என்று தோழி கூறுவது தோழியின் மனித நேய உள்ளத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. தலைவி மீதுள்ள அன்பு போன்றே தலைவன் மீதும் தோழிக்கு உள்ளது. இருவரும் துன்பமில்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என்று தோழி நினைப்பது தோழியின் இணையில்லா அன்பையே எடுத்துரைக்கின்றது.

காதா சப்த சதியில் தோழி, தலைவனை வரைவு கடாவுதலில் அவளின் அறிவு நுட்பம் தெற்றென புலப்படுகின்றது.

**“புளகாங் கிதமே புறவேலி யாக**
**கன்னந் தனில் நீ சின்ன மாகள்**
**அடைக்கலப் பொருள்போல் அமையப் பேணும்1” (காதா. 1–69)**

ஒரு பொருளை ஒருவரிடம் அடைக்கலமாகக் கொடுத்தால் அதை அவர் மிகவும் கவனத்துடன் பாதுகாப்பது அறத்தின் பாற்படும் என்று கருத்து நம்மிடையே உண்டு. அதைப் போல தலைவன், தலைவியை அன்புடன் முத்தமிட்ட பற்குறியை அவள் கண்ணாடியில் காணும்

போதெல்லாம் புளகாகிதம் அடைந்து அதை தலைவன் நினைவாக விரும்பிப் பாதுகாத்தாள் என்று தோழி தலைவனிடம் கூறுகின்றாள். இதிலிருந்து தோழி தலைவிக்கு தலைவன் மீதுள்ள அன்பையும், ஆர்வத்தையும் எடுத்துக் கூறி உன்னுடைய அடைக்கலப் பொருளை மீட்கவாவது வருவாயாக என்று தலைவியை விரைந்து திருமணம் செய்து கொள்ளுமாறு தோழி, தலைவனை வரைவு கடாவுகின்றாள்.

தலைவி இற்செறிக்கப்பட்டு தலைவனைக் காணமுடியாமல் தவிக்கும் செயலை தோழி தலைவனுக்குப் பின்வருமாறு கூறுகின்றார்.

**“மூங்கிற் தட்டியின் பாங்கர் துளைவழி**
**அலைந்திடும் விழியின் அழக! நீதான்**
**செல்வதைக் காணும் சேயிழை யிளவே**
**கூண்டிற் புள்ளெனக் கோலம் தருமே”** **(காதா.3-20)**

தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையில், அவளைக்காண முடியாமல் தவிக்கும் தலைவன், அவளைக் காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் தலைவி வசிக்கும் தெருவின் வழியாகச் செல்கின்றான். அவனால் தலைவியைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவளோ தன் ஆர்வத்தை அடக்கிக்கொண்டு உள்ளே அடங்கிக் கிடந்தவாறே மூங்கில் தட்டியின் அருகில் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாக அலைபாயும் மனத்துடன் அலையும் வழிகளுடனும் அவன் செல்வதைக் கண்டாள். கூண்டில் அகப்பட்ட பறவை போல தலைவி தலைவனைக் காணமுடியாமல் தவிக்கின்றாள். அதனால் அவளை விரைந்து திருமணம் செய்து கொண்டு கூண்டிலிருந்து விடுதலை பெற்றுத் தருமாறு எடுத்துக்கூறி தோழி, தலைவனிடம் தலைவியின் நிலையை எடுத்துக்கூறி திருமணத்திற்கு வற்புறுத்துகின்றாள். மேலும், மற்றொரு பாடலிலும் அதே கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

**வேய்வே லியிநில் வெம்முலை சாய்த்து**
**கால்விரல் தனில்மெலி மேலுடல் கிடத்தி**
**எத்துணை முயன்றும் எட்ட விலையேல்**
**உனைக்காண் பதற்கென் செயும்ஏந் திழையே.** **(காதா. 3-21)**

தலைவி இற்செறிக்கப்பட்டபின் தலைவன் தலைவி தென்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டான். அதற்குத் தோழி, மூங்கில் தட்டியில் முலை சாய்த்தபடி கால் பெருவிரலில் தன் உடற் சுமையை வைத்து எவ்வளவு முயன்றும் உன்னை எட்டிப்பார்க்க முடியவில்லை. அவள் வேறு என்ன செய்ய முடியும் என்று கூறி வரைந்து கொள்ளுமாறு தலைவி வற்புறுத்துகின்றாள்.

சங்க இலக்கியத்தில் வரும் தோழி தலைவி மீது மட்டுமல்லாமல் தலைவன் மீதும் அன்பு கொண்டவளாக தலைவன் வரும் வழியின் இடர்களைக் குறிப்பிட்டு, அதனால் பாதிக்கப்படக் கூடியவள் தலைவியே என்பதை தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறி தலைவியை விரைந்து மணந்து கொள்ளுமாறு வற்புறுத்துகின்றாள். இதில் தோழிக்கு தலைவன் வரும் வழியின் இடர்களைக் குறிப்பிட்டு தலைவனைத் துன்பத்திலிருந்து காக்க முற்படுகின்றாள் என்பது தெளிவு. தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையில் தலைவியின் துன்பத்தைப் பார்த்து சகித்துக் கொள்ள முடியாத தோழி, தலைவியை விரைந்து வரைந்து கொள்ளுமாறு தலைவனிடம் வற்புறுத்துகின்றாள். அதே செயலை காதா சப்தசதி தோழியும் செய்கின்றாள். களவுக் காலத்தே தலைவன் தலைவியைப் பிரிந்த நிலையிலும்,தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையிலும் தலைவியை அத்துன்பத்திலிருந்து விடுவிக்கும் வகையில் தலைவியை விரைந்து மணந்து கொள்ளுமாறு தோழி, தலைவனை வற்புறுத்துகின்றாள். இரண்டு இலக்கியங்களிலும் வரும்

தோழிகள் தலைவியின் மீதுள்ள அன்பின் காரணமாகவும், தலைவி இற்செறிக்கப்பட்ட துன்பத்தை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலும், தலைவியின் நிலையை தலைவனுக்கு எடுத்துக் கூறி தலைவியை விரைந்து வரைந்து கொள்ளுமாறு தலைவனை வரைவு கடாவுவதில் இரண்டு இலக்கிய தோழிகளின் மனித நேயத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அறத்தொடு நிற்றல்**

அறம் என்பபடுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள் என்று வ.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

அறத்தொடு நிற்றல் என்பது, தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவொழுக்கம் பிழையாது, மணப்பதனால் கற்பொழுக்கமாக மாற உதவும் வகையில், அக்களவினைத் தலைவி தோழியிடமும், தோழி செலிவியிடம். செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தை தமையரிடமும் முறையாக வெளிப்படுத்துவதாகும். களவு, கற்பாக மாற வேண்டியது அறமாதலின், அதனை, உரியவரிடம், உரிய நேரத்தில், உரிய வகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது. (உ.ஆ,இரா.செயபால், 2004:142) தலைவியின் உடல் வேறுபாட்டைக்கண்டு வினவிய செவிலிக்கு, தோழி தலைவி கற்புக் கடம்பூண்ட செயலை குறிப்பாக உணர்த்துகின்றாள்.

> **“அன்னாய! வாழி! வேண்டு. அன்னை! நின் மகள்**
> **பாலும் உண்ணாள், பழங்கள் கொண்டு,**
> **நனி பசந்தனள்’ என வினவுதி, அதன் திறம்**
> **யானும் தெற்றென உணரேன் மேல் நாள்,**
> ..........................................................................
> **சென்றோன்மன்ற, அக் குன்று கிழவோனே,**
> **பகல் மாய் அந்திப் படுகடர் அமையத்து,**
> **அவன் மறை தேஎம் நோக்கி, மற்று இவன்.”** **(அகம்.48:1-4, 23-25)**

மலைச்சாரலில் வேங்கைப் பூ பறிப்பதற்காகத் தோழியரோடு சென்றோம். அங்கு புலி என்னும் ஆரவாரம் கேடோ, அப்பொழுது அங்கு கையில் வில்லை உடையவனாக தலைவன் ஒருவன் தோன்றி புலி எங்கே என்று கேட்டான், நாங்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்து நின்றோம். அவன் அழகு பொருந்திய உங்கள் வாயில் பொய் வருமா என்று கூறி வந்த வழியாக தேரை மெதுவாகச் செலுத்திச் சென்றான். அவ்வாறு செல்லும்போது தலைவியின் கண்களையே பல முறை நோக்கிச் சென்றான். மாலையில் அவன் சென்று மறைந்த திசையை நோக்கி இவன் ஒர் ஆடவனே என்றாள் தலைவி. இதிலிருந்து ஆய்ந்தறியும் அறிவுடையோர்க்கு அதன் அளவாக ஒரு கோட்பாடு உண்டு, அதை அறிந்து கொள்வாயாக என்று தோழி, செவிலிக்கு குறிப்பாக தலைவியின் காதலை உணர்த்துகின்றாள். இதில் நுண்ணிய அறிவுத் திறமுடையவள் தோழி என்பதை அறியமுடிகின்றது. தோழி தலைவியின் துன்பத்தைப் போக்குவதற்கான செயலில் தன் அறிவுக் கூர்மையைப் பயன்படுத்துவதில் யாருடைய மனதையும் புண்படுத்தாத வகையில் செயல்படுகின்றாள். இதிலிருந்து யாரையும் மனதளவிலும் துன்பப்படுத்தக் கூடாது என்று நினைக்கின்ற தோழியின் மனிதநேயம் போற்றுதலுக்குரியது.

செவிலி தலைவியின் உடல் வேறுபாட்டைக் கண்டு அதற்கான காரணத்தை வினவுகின்ற நிலையில் தலைவியின் காதலைச் செவிலிக்குக் குறிப்பாக உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள். தோழியர் கூட்டத்தோடு கடலில் நீராடி, கடற்கரைச் சோலையில் சிற்றில் குவித்து, சிறு சோறு ஆக்கி விளையாடிய வருத்தம் தீர இளைப்பாறிய நேரத்தில் அங்கு ஒரு தலைவன் வந்தான். அவன் எங்களைப் பார்த்து மூங்கில் போன்ற தோளினையும், மடப்பம் பொருந்திய பெண்களே, நீங்கள் ஆக்கிய சிறு சோறை விருந்துண்டு, இந்தச் சிறிய குடிகையில் தங்கிச் செல்லலாமா என்று என் நெஞ்சம் வருந்துமாறு கேட்டான். நான் செல்க என்று கூறினேன். அவன் செல்லாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

**"அன்னை அறியினும் அறிக, அலர்வாய்**
**அம் மென் சேரி கேட்பினும் கேட்க**
**பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி,**
**கொடுஞ் கழிப் புகாஅர்தங தெய்வம் நோக்கி,**
**கடுஞ் சூள் தருகுவன், நினக்கே கானல்**
**..........................................................................**
**என்னே குறித்த நோக்கமொடு, நன்னுதால்**
**ஒழிகோ யான என அழிதாகக் கூறி,**
**நெடீடுந் தேர்க் என்ன, நோக்கி, தான் தன்**
**நெடுந் தேர்க் கொடிஞ்சி பற்றி**
**நின்றோன் போலும் என்றும் என் மகட்கே."** **(அகம்.110:1–5,21–25)**

இவன்தான் தன் மகளுக்கு ஏற்ற தலைவன் என்று அன்னை அறிந்தாலும் அறியட்டும், அலர் தூற்றும் பெண்கள் தூற்றினாலும் தூற்றட்டும், புகாரிலுள்ள தெய்வத்தின் மீது சத்தியமாக எனக்கு ஒன்றும் தெரியாது என்று தோழி சத்தியம் செய்கின்றாள். தலைவிக்கு தலைவன் மீதுள்ள காதலைக் குறிப்பால் உணர்த்தி அதன் மூலம் இருவருக்கும் திருமணம் நடத்திக் வைப்பதற்கான முயற்சியைத் தோழி மேற்கொள்கின்றாள். தலைவியின் காதல், திருமணத்தில் முடியவேண்டும் என்பதற்காகத் தலைவியின் காதலைச் செவிலியிடம் குறிப்பாக உணர்த்தி தலைவியின் துன்பம், இன்பமாக மாற வேண்டும் என்று நினைத்து செய்யும் தோழியின் செயல் தோழிக்குத் தலைவி மீதுள்ள அன்பின் வெளிப்பாட்டைத்தான் காட்டுகின்றது.

காதா சப்தசதியில் தலைவியின் உடல் வேறுபாட்டை அறிந்தும், குறிப்பை உணராத பெறறோர் தலைவிக்கு ஏதோ நோய் வந்துவிட்டது என்றும், பேய், பிசாசின் வேலையாக இருக்கும் என்றும் வைத்தியம் செய்ய விழைகின்றனர்.

**வெட்ட வெளியை வெறித்து நோக்கும்**
**நெடுமூச் செறியும்! நீள நகைக்கும்!**
**பொருளில் சொல்லிற் புலம்பும்! யாதோ**
**உறுவதொன் றுண்டிவ் வொண்டொடி யுளத்தே** **(காதா.3— 96)**

தோழி, தலைவியின் உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றாள். தலைவி வெட்டவெளியை வெறித்துப் பார்ப்பதற்கும், பெருமூச்செறிவதற்கும், நீண்ட நேரம் சிந்திப்பதற்கும், ஏதேதோ உளறுவதற்கும் தலைவியின் உள்ளத்தில் ஒன்று உண்டு என்று தலைவியின் உள்ளக் குறிப்பை பெற்றோருக்கு குறிப்பாக உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள்.

தலைவியின் உடல் வேறுபாட்டைக் கண்டு வினவும் செவிலியின் வினாவிற்கும், தலைவியின் உடல் வேறுபாட்டால் அவளுக்கு பேய், பிசாசு பிடித்துவிட்டது என்று நினைத்து

வெறியாட்டு நிகழ்த்த நினைக்கும் பெற்றோருக்கு தலைவியின் உடல் வேறுபாட்டிற்கு காரணம் தலைவனே என்பதை தோழி பெற்றோருக்குக் குறிப்பாக உணர்த்துகின்றாள். தலைவி விரும்பும் தலைவனுக்கே தலைவியை மணம் முடித்து வைக்குமாறு தலைவியின் பெற்றோருக்கு உணர்த்தும் தோழியின் மதிநுட்பம் குறிப்பிடத்தக்கது. இரண்டு இலக்கியங்களிலும் தோழியின் செயல் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றது. தலைவி விரும்பும் தலைவனுக்கே தலைவியை மணம் முடித்துவைக்கப் பாடுபடும் தோழியின் அன்புள்ளம் போற்றுதலுக்குரியது.

**முடிவுரை**

சங்க இலக்கியம் என்றால் நினைவில் நிற்பது தோழியின் பாத்திரப் படைப்பு மட்டுமே. அதைப் போன்றே காதாசப்த சதியிலும் தோழியின் பாத்திரப் படைப்பு காணப்படுகின்றது. ஏனென்றால் தன்னலம் சிறிதும் இல்லாமல் தலைவியின் நலம் மட்டுமே கருத்தில் கொண்டு அவளுக்காகவே இறுதிவரை வாழும் சிறந்த மனிதநேயம் மிக்க பாத்திரம் தோழி. கொடைவளங்களை மனிதநேயத்தின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளமுடியாது. மன்னன் மக்களுக்கு, புலவர்களுக்கு, வீராகளுக்கு கொடை வழங்கினான் என்றால் அது அவனது கடமை. அவை அறத்தின் பால் மட்டுமே நடைபெறும் செயல். தலைவியால் தோழிக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை என்பது உறுதி. ஆனாலும் தோழிக்கு தலைவி மீதுள்ள சுயநலமில்லாத அன்பில் மட்டும் எந்தக் குறைபாடும் தோன்றவில்லை. தலைவியின் மகிழ்ச்சிக்காக தன் உயிரையும் கொடுக்கும் தன்னலமற்ற மாசற்ற, அன்புள்ளம் கொண்ட மனிதநேயம் கொண்டவள் தோழி என்பதைச் சங்க இலக்கியங்களும் காதா சப்தசதியும் பறைசாற்றுகின்றன என்பது தெளிவு.